# அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மறு தர மதிப்பீட்டிலும் “ஏ” தகுதி பெற்றது)

நாள் : 18.10.2016

ஸ்டாப் செலக்சன் கமிஷன் (SSC) மத்திய அரசுப் பணிக்கான காலியிடங்களை பொது எழுத்துத் தேர்வுகளை நடத்தி அதன் மூலம் நிரப்பி வருகிறது. இந்த அமைப்பின் சார்பாக பிளஸ் 2 படிப்பை முடித்தவர்களுக்கான அரசுப் பணியிடங்களுக்கான தேர்வு அறிவிப்பு அக்டோபர் 7 ஆம் தேதி வெளியாகியுள்ளது.

இதில் போஸ்டல் அசிஸ்டென்ட் மற்றும் சார்ட்டிங் அசிஸ்டென்ட் பிரிவில் 3,281 காலியிடங்களும், டேட்டாஎன்ட்ரி ஆபரேட்டர் பிரிவில் 506 இடங்களும், லோயர் டிவிஷன் கிளார்க் பிரிவில் 1,321 இடங்களும், கோர்ட் கிளார்க் 26 இடங்களும் சேர்த்து மொத்தம் 5,134 இடங்கள் நிரப்பப்பட உள்ளன.

இதில் டயர் – 1 (Computer Based Test – Multiple Choice Questions), டயர் – 2 (Descriptive), மற்றும் டயர் – 3 (Typing test) என மூன்று பிரிவுகளாக எழுத்துத் தேர்வுகள் நடத்தப்படுகிறது. இத்தேர்வுக்கு விண்ணப்பிக்க கடைசிநாள்: 07.11.2016. டயர்-1 தேர்வு நடைபெறும் நாள்: 7.1.2017 மற்றும் 5.2.2017. டயர்-2 தேர்வு நடைபெறும் நாள்: 9.4.2017.

இந்த எழுத்துத் தேர்வினை எளிதில் எதிர்கொள்ளும் வகையில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக தன்னார்வ பயிலும் வட்டம் சார்பில் இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளது. இதற்கான பயிற்சி வகுப்புகள் 12.11.2016 சனிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு அழகப்பா பல்கலைக்கழக தன்னார்வபயிலும் வட்டத்தில் (Alagappa University Study Circle) தொடங்கப்பட உள்ளது.

இப்பயிற்சியில் பங்குபெற விருப்பம் உள்ளவர்கள் பழனியப்பச் செட்டியார் நினைவரங்கத்தில் இயங்கும் தன்னார்வ பயிலும் வட்டத்திற்கு நேரில் சென்று பெயரை பதிவுசெய்து கொள்ளலாம். 04565- 223 266 என்ற தொலைபேசியிலோ அல்லது 88707-81897 என்ற அலைபேசியிலோ தொடர்புகொள்ளலாம், அல்லது alagappauniversitystudycircle@gmail.com என்ற மின்அஞ்சல் மூலமாகவும் பதிவு செய்யலாம் என பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ.) பேரா.வி. பாலச்சந்திரன் அவர்கள் தெரிவிக்கிறார்.

பேரா.வி. பாலச்சந்திரன்

பதிவாளர் (பொ.)